2002 அக்டோபர் 29] [பேரவைத் தலைவர்]

முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னதற்குப் பிறகு அந்தப் பிரச்சினை சம்பந்தமாக எடுத்துக்கொள்வதற்கே வழி கிடையாது; எடுப்பதற்கு அனுமதி அளிப்பதும் கிடையாது. என்றாலும், பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, இத்தனை தலைவர்களையும் நான் பேச அனுமதித்தேன். அரசின் தரப்பிலே அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலே வேறு எதற்கும் இடம் இல்லை. அடுத்த நிகழ்ச்சிக்குப் போகலாம். (குறுக்கீடுகள்) சேலம் மாவட்டம்...

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன், இனி இதில் விவாதத்திற்கு இடம் கிடையாது. (குறுக்கீடுகள்) இனி இதிலே விவாதத்திற்கு நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இனிமேல் இது தொடர்பாகப் பேசுவது எதுவும் நான் அவைக் குறிப்பிலே ஏறுவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) ஒத்திவைப்புத் தீர்மானத்தை நேற்றுக் கொண்டு வந்தீர்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தை அளித்தார்கள். அதற்குப் பிறகு அது சம்பந்தமான பிரச்சினையை அவையிலே எழுப்புவதற்கு யாரும் அனுமதித்ததே கிடையாது. என்றாலும், பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி உங்களை இப்போது பேசுவதற்கு அனுமதித்தேன். மீண்டும், மீண்டும் இதை விவாதப் பொருளாக ஆக்குவதற்கு நான் அனுமதிக்க முடியாது.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி. ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடுகள்)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

*முற்பகல் 11-40*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டு, தொடர்ந்து நின்றுகொண்டிருந்தனர்.)*

என்ன, சொல்லுங்கள். *(குறுக்கீடு)* இல்லை, இனிமேல் அனுமதிக்க முடியாது. *(குறுக்கீடுகள்)*

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து எட்டாவது மற்றும் ஐம்பத்து ஒன்பதாவது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்பாக வந்து அமர்ந்துகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)*

## (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன், *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)*

***திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதிமூன்றாவது மற்றும் பதினான்காவது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)*